DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
NAGAPATTINAM.

**Special.Sessions Case No. 5/2025**

**Deposition of Witness for Prosecution : P.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக்குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | வீரச்சாமி |
| ஊர் | : | பட்டுக்கோட்டை | தாலுக்கா | : | பட்டுக்கோட்டை |
| ஜாதி | : | -- | வயது | : | 53 |
| மதம் | : | -- | தொழில் | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 30.07.2026

**எதிரி ஆஜர் செய்யப்பபட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறேன். காலணி தைக்கும் பணி செய்து வருகிறேன். இறந்து போன பாலாகிருஷ்ணன் என் மைத்துனர். பெயிண்டர் வேலை செய்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 01.05.2025 அன்று நான் பட்டுகோட்டையில் இருந்தேன். காலை சுமார் 03:00 மணி அளவில் பாலாகிருஷ்ணனுடன் நாகப்பட்டினம் அரசி குடோனில் வேலை பார்த்து வந்த நபர்கள் போன் செய்து பாலகிருஷ்ணன் மீது பெயின்டர் மணி உடைய கொழுந்தியா பையன் கல்லை தூக்கி போட்டதாக சொன்னார்கள்.(செவிவழி செய்தி என்பதால் ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணைக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.) நாகப்பட்டினம் மருத்துவமனையில் பார்க்க முடியாது என்று

சொன்னதால் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு ஆம்பிலன்ஸ்ஸில் அழைத்து போவதால் அங்கு வர சொன்னார்கள். நான் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு போய் பார்த்தேன். ICU வில் வைத்து இருந்ததால் என்னை பார்க்க விடவில்லை. 04.05.2025 அன்று பாலகிருஷ்ணன் மருத்துவமனையில் இறந்து விட்டார். மறுநாள் போலீஸார் வந்து என்னை விசாரித்து Post Mortem முடிந்து பிரேதத்தினை ஒப்படைத்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. எனக்கு தகவல் கொடுத்த நபர் யார் என்று பெயர் தெரியாது. பெயிண்டரின் கொழுந்தி மகன் கல்லை போட்டதாக என்னிடம் சொன்ன நபரின் பெயர் தெரியாது. அந்த மாறி தகவல் யாரும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரித்தபோது 05.05.2025 தான் தஞ்சாவூர் மருத்துவமனை போனதாக சொல்லியுள்ளேன் என்றும் அதற்கு முன்பாக போய் பார்த்தபோது ICU வில் இருந்ததால் பார்க்கவிடவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் என் மைத்துனர் என்பதால் போலீஸார் சொல்லி கொடுத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒப்பம்/- அசோக்குமார்

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.